# மாகாணக் கல்வித்திணைக்களம் வடக்கு மாகாணம்

## பயிற்சி வினாத்தாள்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) பரீட்சை ,2020ஆனி
**General Certificate of Education (Adv. Level ) Examination ,June 2020**

| | | |
|---|---|---|
| பொருளியல் I<br>**Economics I** | **21 T I** | இரண்டு மணித்தியாலம்<br>*Two hours* |

**அறிவுறுத்தல்கள்:**

* **எல்லா** வினாக்களுக்கு விடை எழுதுக.

* பல்தேர்வு வினாக்களுக்கு **மிகச் சரியான விடையினைத் தெரிவு** செய்து அதன் கீழ் கோடிடுக.

**1.** அ. - இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 2.4 ஆகக் காணப்பட்டது.
ஆ - இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் போதுமானதல்ல.
இ - அகவயத்தன்மையான கூற்றுக்களாகக் காணப்படும்.
ஈ - உண்மையான அல்லது பொய்யான கூற்றுக்களாகக் காணப்படலாம்
மேலே கூறப்பட்டவற்றுள் பொருளியல் நேர்க் கூற்றுக்களுடன் **தொடர்புடைய விடயங்கள்**
(1) அ,ஆ மட்டும் (2) ஆ,இ மட்டும் (3) இ,ஈ மட்டும் (4) அ,ஈ மட்டும் (5) ஆ,ஈ மட்டும்

**2.** **பொருளாதாரமல்லாப் பண்டம்** ஒன்றின் பிரதான பண்பாகக் கருதப்படக் கூடியது
(1) இலவசமாகக் கிடைக்கின்ற எல்லாப் பண்டங்களும்
(2) மனித தேவைகள் விருப்பங்களைப் பூர்த்தி செய்கின்ற எல்லாப் பண்டங்களும்.
(3) காரணிச் செலவொன்றை ஏற்கின்ற பண்டமாக இருத்தல்
(4) நேர்க்கணியத் திருப்தியையும் பயன்பாட்டையும் தருகின்ற எல்லாம்
(5) எல்லையற்ற நிரம்பலுடையதாகக் கிடைக்கப் பெறுகின்ற பண்டமாக இருத்தல்.

**3.** பொருளியலின் **மையப்பிரச்சினையாக** அருமை கருதப்படக் காரணம்
(1) மனித விருப்பங்கள் வரையறையற்றிருத்தல்
(2) வளங்கள் வரையறுக்கப்பட்டதாக இருத்தல்
(3) சகல பொருளாதாரங்களுக்கும் பொதுவானதாக இருத்தல்
(4) மனித தேவைகள் வரையறுக்கப்பட்டவாயாக இருத்தல்
(5) விருப்பங்களுடன் ஒப்பிடுகையில் வளங்கள் போதியளவு கிடைக்கப் பெறாமை

**4.** பொருளாதார வளங்களின் பிரதான வகைகளை மட்டும் உள்ளடக்கியது
(1) மீளும் வளம் , மீளா வளம் , பணம் , ஆதன வளம்
(2) மீளும் வளம் , மீளா வளம் , பணம், முயற்சி
(3) நிலம், உழைப்பு, பணம் , முயற்சி
(4) நிலம் , உழைப்பு ,மூலதனம் ,முயற்சி
(5) ஆதனவளம், நிலம் ,மூலதனம் ,முயற்சி

**5.** அமையச்செலவுடன் தொடர்புடையதாக கருதப்பட முடியாத கூற்று
(1) அமையச் செலவு ஒரு நிதி ரீதியான எண்ணக்கருவாகும்
(2) அமையச் செலவு ஒரு மெய் ரீதியான எண்ணக்கருவாகும்
(3) அமையச் செலவு ஒரு உள்ளுணர்வான எண்ணக்கருவாகும்.
(4) அருமையற்ற வளங்களுக்கு அமையச் செலவு தோற்றம் பெறாது.
(5) அமையச் செலவு காரணமாக வெளிவாரிச் செலவுகள் தோன்றும்.

**6.** சமூக சந்தைப் பொருளாதாரம் தொடர்பாக மிகவும் சரியானது பின்வருவனவற்றுள் எது?
(1) உற்பத்தி வளங்களின் உடமை அரசிற்கும் தனியாருக்கும் சமமாகக் காணப்படும்.



Scanned by TapScanner

(2) உற்பத்தி வளங்களின் உடமை அரசிற்கு மட்டும் காணப்படும்.
(3) உற்பத்தி வளங்களின் உடமை அரசாங்கத்திற்கு இருந்தாலும் கூட வளப்பயன்பாடு தொடர்பாக அதிகளவு தாக்கத்தை தனியார் மேற்கொள்வார்.
(4) உற்பத்தி வளங்களின் உடமை தனியாருக்கு இருந்தாலும் கூட வளப்பயன்பாடு தொடர்பாக அதிகளவு தாக்கத்தை அரசாங்கம் மேற்கொள்வார்.
(5) உற்பத்தி வளங்களின் உடமை தனியாருக்கு இருப்பதுடன் அதிகளவு இலாபம் பெறுவதை ஊக்குவிப்பாகக் கொண்டு வளப்பங்கீடு இடம் பெறும்.

**7.** சொத்துடைமை அடிப்படையில் பொருளாதார முறைமையை வகைப்படுத்தின் அவை
(1) முதலாளித்துவப் பொருளாதாரம் ,சமதர்மப் பொருளாதாரம் என வகைப்படும்.
(2) சந்தைப் பொருளாதாரம் ,கட்டளைப் பொருளாதாரம் , கலப்புப் பொருளாதாரம் என வகைப்படும்.
(3) சமூக சந்தைப் பொருளாதாரம் சமவுடமைச் சந்தைப் பொருளாதாரம் என வகைப்படும்.
(4) முதலாளித்துவப் பொருளாதாரம் பாரம்பரிய பொருளாதாரம் என வகைப்படும்.
(5) பாரம்பரிய பொருளாதாரம் ,சமதர்மப் பொருளாதாரம் என வகைப்படும்.

**8.** குறித்த பொருளாதாரத்தின் குறித்த காலப்பகுதிக்கான முதலீட்டுச் செலவினம் குறைவடைகின்றது இதன் காரணமாக உற்பத்தி சாத்திய வளையியில் ஏற்படக் கூடிய மாற்றம்.
(1) உற்பத்தி சாத்திய வளையி வலதுபுறம் நோக்கி நகர்வடையும்
(2) உற்பத்தி சாத்திய வளையி இடதுபுறம் நோக்கி நகர்வடையும்
(3) சாத்திய வளையியின் மீதுள்ள புள்ளி சாத்திய வளையியின் இடதுபுறம் நோக்கிய ஒரு நார்வினைக் காட்டும்
(4) சாத்திய வளையியின் மீதுள்ள புள்ளி சாத்திய வளையியின் வழியே கீழ் நோக்கிய அசைவைக் காட்டும்.
(5) சாத்திய வளையியின் மீதுள்ள புள்ளி சாத்திய வளையியின் வழியே மேல் நோக்கிய அசைவைக் காட்டும்.

**9.** கேள்வி ஒடுக்கத்தின் போது பின்வருவனவற்றுள் எது **சாத்தியமானது**.
(1) சனத்தொகையின் அளவு குறைவடையும்
(2) குறித்த பண்டத்தின் விலை குறைவடையும்
(3) தொடர்புடைய பதிலீட்டு பண்டத்தின் சார்புவிலை குறைவடையும்
(4) நுகர்வோன் வருமானம் குறைவடையும்
(5) நுகர்வோன் சுவைகுறைவடையும்

**10.** குறித்த பால்மா பைக்கற்றுக்கான போட்டிச் சந்தையில் இயற்கைப் பசுப்பால் உற்பத்தியில் ஏற்படும் பாரிய அதிகரிப்புக்காரணமாக பசுப்பாலின் விலையில் ஏற்படும் வீழ்ச்சியானது குறித்த பால்மா பைக்கற்றில்
1. கேள்வி ஒடுக்கம் ஒன்றை ஏற்படுத்தும்.
2. கேள்வி நீட்டம் ஒன்றை ஏற்படுத்தும்.
3. கேள்வி அதிகரிப்பு ஒன்றை ஏற்படுத்தும்.
4. கேள்வி குறைவு ஒன்றை ஏற்படுத்தும்.
5. எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

**11.** குறித்த நுகர்வோன் A, B ஆகிய இரண்டு பண்டங்களை நுகர்பவனாவான் இங்கு A சாதாரண பண்டமாகவும் B இழிவுப் பண்டமாகவும் காணப்படுகின்றது.இந்நுகர்வுானின் மாததந்த சம்பளம் ஆனி மாதத்தில் ரூபா 50000 விலிருந்து 60000 ரூபாவான அதிகரித்தது. எனின்
(1) A, B ஆகிய இரண்டு பண்டங்களின் கேள்வி குறையும்
(2) A, B ஆகிய இரண்டு பண்டங்களின் கேள்வி அதிகரிக்கும்
(3) A பண்டத்தின் கேள்வி அதிகரிக்கும் B பண்டத்தின் கேள்வி குறைவடையும்.
(4) A பண்டத்தின் கேள்வி குறைவடையும் B பண்டத்தின் கேள்வி அதிகரிக்கும்
(5) A பண்டத்தின் கேள்வி அதிகரிக்கும் B பண்டத்தின் கேள்வி மாறாது.

**12.** X பண்டத்தின் விலை அதிகரிக்க Z பண்டத்தின் கேள்வி குறைவடைந்த அதேவேளை Y பண்டத்தின் கேள்வி அதிகரித்தது எனின்

| | X-Y பண்டம் | X-Zபண்டம் |
|---|---|---|
| (1) | பதிலீட்டுப் பண்டம் | இணைப்புப் பண்டம் |
| (2) | இணைப்புப் பண்டம் | பதிலீட்டுப் பண்டம் |
| (3) | கிபன் பண்டம் | இணைப்புப் பண்டம் |
| (4) | இணைப்புப் பண்டம் | கிபன் பண்டம் |
| (5) | பதிலீட்டுப் பண்டம் | இழிவுப்பண்டம் |



Scanned by TapScanner

**13.** குறித்த பண்டத்தின் கேள்விக் கோட்டின் சரிவு **($\Delta P/ \Delta Qd$) – 1/10** ஆகவும் 20/= விலையில் கேள்வித் தொகை **200** ஆகவும் காணப்பட்டது எனின் 20/= விலையில் கேள்வி நெகிழ்ச்சி யாது?

(1) -0.01 (2) -0.25 (3) -0.5

(4) -0.75 (5) -1.0

**14.** குறித்த பண்டத்தின் கேள்விச் சமன்பாடு **Qd = 6000 -200p** இப்பண்டத்தின் எவ்விலையில் நுகர்வோன் செலவு உச்சப்படுத்தப்படும்.

(1) 0 (2) 10ரூபா (3) 15ரூபா

(4) 20ரூபா (5) 30ரூபா

**15.** குறித்த சந்தையில் காணப்படும் A ,B ,C ,D ஆகிய நான்கு நிறுவனங்களின் பொருளின் விலையில் ஓர் அதிகரிப்பு ஏற்பட்டது.

A நிறுவனத்தின் மொத்த வருமானம் அதிகரித்தது.

B நிறுவனத்தின் மொத்த வருமானம் குறைவடைந்தது.

C நிறுவனத்தின் மொத்த வருமானம் உடனடியாகப் பூச்சியமானது.

D நிறுவனத்தின் மொத்த வருமானம் மாறாதிருந்தது.

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| (1) | நெகிழ்ச்சி வாய்ந்தது | ஒருமை நெகிழ்ச்சி | முடிவிலி | நெகிழ்சியற்றது. |
| (2) | ஒருமை நெகிழ்ச்சி | முடிவிலி | நெகிழ்சியற்றது. | நெகிழ்ச்சி வாய்ந்தது |
| (3) | நெகிழ்சியற்றது. | நெகிழ்ச்சி வாய்ந்தது | முடிவிலி | ஒருமை நெகிழ்ச்சி |
| (4) | நெகிழ்சியற்றது. | முடிவிலி | நெகிழ்ச்சி வாய்ந்தது | ஒருமை நெகிழ்ச்சி |
| (5) | முடிவிலி | நெகிழ்ச்சி வாய்ந்தது | நெகிழ்சியற்றது. | ஒருமை நெகிழ்ச்சி |

**16.** ஒரு பண்டம் சந்தையில் நிரம்பல் செய்யப்படுகின்றது எனின் அதிலிருந்து பெறக் கூடிய முடிவு எது

(1) பொருளுக்கான கேள்வி சந்தையில் அதிகம் காணப்படகின்றது என்பதாகும்.

(2) எதிர்காலத்தில் பண்டத்தின் விலை அதிகரிக்கலாம் என்று நுகர்வோன் எதிர்பார்க்கின்றான் என்பதாகும்

(3) குறித்த பண்டத்தின் உற்பத்தியால் அல்லது விற்பனையால் இலாபம் கிடைக்காது போகலாம் என உற்பத்தியாளன் எதிர்பார்ப்பதாலாகும்

(4) குறித்த பண்டத்தின் உற்பத்திற்கான வளம், தொழில்நுட்பம் என்பன நிறுவனத்திடம் காணப்படகின்றது என்பதாகும்.

(5) நிறுவனங்கள் உற்பத்தியை நிறுத்துவதற்குத் திட்டமிட்டுள்ளன என்பதையாகும்.

**17.** பின்வரும் எக்காரணி நிரம்பல் கோடு இடதுபுறம் நோக்கி நகர்வடைவதில் செல்வாக்குச் செலுத்தும்.

(1) குறித்த பண்டத்தின் விலையில் ஏற்படும் குறைவு.

(2) உற்பத்தியாளன் மீது விதிக்கப்பட்டிருந்த அலகுவரி நீக்கப்பட்டமை.

(3) உற்பத்தியாளனுக்கு வழங்கிய சிறப்பு அலகு மானியம் நீக்கப்பட்டமை.

(4) நுகர்வோருக்கு புதிதாக சிறப்பு அலகு மானியம் ஒன்று வழங்கப்பட்டமை.

(5) பண்டங்களின் உள்ளீடுகள் மீது விதிக்கப்பட்டிருந்த சிறப்பு வரி நீக்கப்பட்டமை.

**18.** நிரம்பல் நெகிழ்ச்சி ஒன்றிலும் அதிமாகக் காணப்படும் நேர்கோட்டு நிரம்பல் கோட்டின் வழியே

(1) விலை அதிகரிக்கும் போது நிரம்பல் நெகிழ்ச்சி அதிகரிக்கும்.

(2) விலை அதிகரிக்கும் போது நிரம்பல் நெகிழ்ச்சி குறைவடையும்.

(3) விலை அதிகரிக்கும் போது நிரம்பல் நெகிழ்ச்சி அதிகரிக்கும், விலை குறையும் போது குறைவடையும்.

(4) விலை அதிகரிக்கும் போது நிரம்பல் நெகிழ்ச்சி குறைவடையும், விலை குறையும் போது மாறாது

(5) விலை அதிகரிக்கும் போதும் குறையும் போதும் நிரம்பல் நெகிழ்ச்சி மாறாது

**19.** குறித்த பண்டத்தின் நிரம்பல் சமன்பாட்டின் **b = 100** கேள்விச் சமன்பாட்டின் **b = -100** சமநிலை விலை **30** ரூபாவாகக் காணப்படுகின்றது எனின்

(1) 40 ரூபா விலையில் மிகைக் கேள்வி நேர்க்கணியமாகக் காணப்படும்.

(2) 20 ரூபா விலையில் மிகைக் நிரம்பல் நேர்க்கணியமாகக் காணப்படும்.

(3) 30 ரூபா விலையில் நுகர்வோன் மிகையிலும் பார்க்க உற்பத்தியாளன் மிகை அதிகமாகக் காணப்படும்.

(4) 30 ரூபா விலையில் நுகர்வோன் மிகையிலும் பார்க்க உற்பத்தியாளன் மிகை குறைவாகக் காணப்படும்.

(5) 30 ரூபா விலையில் நுகர்வோன் மிகையும் பார்க்க உற்பத்தியாளன் மிகையும் சமமாகக் காணப்படும்.



Scanned by TapScanner

**20.** குறித்த பண்டத்தின் கேள்வி அதிகரிக்கும் வீதத்துக்குச் சமமான வீதத்தில் நிரம்பல் குறைவடையுமாயின்
(1) சமநிலை தொகை அதிகரிக்கும் அதேவேளை சமநிலை விலையும் அதிகரிக்கும்
(2) சமநிலை தொகை அதிகரிக்கும் அதேவேளை சமநிலை விலை குறைவடையும்.
(3) சமநிலை தொகை குறைவடையும் அதேவேளை சமநிலை விலை அதிகரிக்கும்
(4) சமநிலை தொகை மாறாத போது சமநிலை விலை அதிகரிக்கும்
(5) சமநிலை தொகை மாறாத போது சமநிலை விலை குறைவடையும்.

**21.** தலைக்கவசத்திற்கான போட்டிச் சந்தையில் தலைக் கவசத்திற்கான உற்பத்திச் செலவு அதிகரிக்கும் அதே சமயம் அரசு தலைக்கவசத்தை அணியுமாறு சட்டத்தைப் பிறப்பித்தது. இதனால் தலைக்கவசத்திற்கான சந்தையில்
(1) சமநிலை விலையும் சமநிலைத் தொகையும் நிச்சயம் அதிகரிக்கும்.
(2) சமநிலை விலை அதிகரிக்க சமநிலைத் தொகை குறைவடையும்
(3) சமநிலை விலை பற்றி நிச்சயித்துக் கூறமுடியாது சமநிலைத் தொகை அதிகரிக்கும்.
(4) சமநிலை விலை அதிகரிக்கும் சமநிலைத் தொகை பற்றி நிச்சயித்துக் கூறமுடியாது.
(5) சமநிலை விலை அதிகரிக்க சமநிலைத் தொகை மாற்றமின்றிக் காணப்படும்.

**22.** குறித்த பண்டத்தின் கேள்விச் சமன்பாடு $Qd = 500 - 10p$ நிரம்பல் சமன்பாடு $Qs = -100 + 20p$ ஆகக் காணப்பட்டது. காலநிலை மாற்றம் காரணமாக ஏனையவை மாறாத நிலையில் ஒவ்வொரு விலையிலும் நிரம்பலானது 60 அலகுகள் குறைவடைந்தது எனின்

| | சமநிலை விலை | நுகர்வோன் செலவு |
|---|---|---|
| (1) | குறைவடையும் | குறைவடையும் |
| (2) | அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| (3) | அதிகரிக்கும் | குறைவடையும் |
| (4) | குறைவடையும் | அதிகரிக்கும் |
| (5) | அதிகரிக்கும் | மாறாது. |


**23.** குறித்த பண்டத்தின் மீது அரசு அலகு வரி விதிப்பதன் விளைவினைச் சரியாகக் காட்டி நிற்பது
(1) அரசுக்கு வரி வருமானம் கிடைப்பதுடன் அது நுகர்வோன் மிகை இழப்புக்குச் சமமாகக் காணப்படும்.
(2) அரசுக்கு வரி வருமானம் கிடைப்பதுடன் அது உற்பத்தியாளன் மிகை இழப்புக்குச் சமமாகக் காணப்படும்.
(3) அரசுக்கு வரி வருமானம் கிடைப்பதுடன் அது நுகர்வோன் மிகை இழப்பு ,உற்பத்தியாளன் மிகை இழப்பின் கூட்டுத் தொகைக்குச் சமமாகக் காணப்படும்.
(4) அரசுக்கு வரி வருமானம் கிடைப்பதுடன் அது நுகர்வோன் மிகை இழப்பு ,உற்பத்தியாளன் மிகை இழப்பின் கூட்டுத் தொகைக்குக் குறைவாகக் காணப்படும்.
(5) அரசுக்கு வரி வருமானம் கிடைப்பதுடன் அது நுகர்வோன் மிகை இழப்பு ,உற்பத்தியாளன் மிகை இழப்பின் கூட்டுத் தொகைக்குக் குறைவாகக் காணப்படும்.

**24.** கீழே தரப்பட்டுள்ள அட்டவணையானது Z பண்டத்தின் கேள்வி நிரம்பலினை புலப்படுத்துகின்றது.

| பண்டம்Z இன்விலை($) (வரிக்கு முன்) | கேள்வி (000') | நிரம்பல் (000') |
|---|---|---|
| 1 | 150 | 120 |
| 2 | 140 | 140 |
| 3 | 130 | 160 |
| 4 | 120 | 180 |
| 5 | 110 | 200 |

மேலுள்ள அட்டவணையைப் பயன்படுத்தி விடையளிக்குக.அலகுவரியாக அரசு 3$ ஐ அறிமுகப்படுத்தின் **உற்பத்தியாளன் தாங்கும் அலகு** வரி?
(1) $ 4 (2) $ 3 (3) $ 2 (4) $ 1 (5) $ 1.5

**25.** குறித்த பண்டத்தின் மானியத்திற்கு முன்னரான,மானியத்தின் பின்ரான சமநிலைகளைக் கீழேயுள்ள வரைபு காட்டுகின்றது.







Scanned by TapScanner

| | மானியத்துக்கு முன் பொருளாதார மிகைப் பிரதேசம் | மானியத்துக்கு பின் பொருளாதார மிகைப் பிரதேசம் |
|---|---|---|
| **(1)** | **(A+B) + (I+J)** | **( A+B+I+H+G ) + ( B+ C + I + J )** |
| **(2)** | **(A+B) + (I+J)** | **( A+B+I+H+G ) + ( G+ H + I + J )** |
| **(3)** | **(A+B) + (I+J)** | **( A) + ( B+ C + I + J )** |
| **(4)** | **(A+B) + (I+J)** | **( A+B+I+H+G ) + ( J )** |
| **(5)** | **(A+B) + (I+J)** | **( A+B+I+H+G ) + ( B+ C + F )** |

**26.** ஆகக்கூடிய விலைக்கட்டுப்பாடு விதிப்பதன் காரணமாக சந்தை விலைப் பொறிமுறை இயக்கமற்றுப் போவதால் பற்றாக்குறையான பண்டங்களைப் பங்கீடு செய்வதற்கு விலையல்லா மூலகங்கள் என்பதனுள் **அடங்காதது**.

(1) பங்கீட்டு அட்டை விநியோகம்
(2) வரிசை முறை
(3) இலஞ்சம் மூலம் பங்கீடு செய்தல்
(4) வேறு பண்டங்களுடன் இணைத்துப் பங்கீடு செய்தல்.
(5) உற்பத்தியாளரை ஊக்குவித்தல்


**27.** அரசு உத்தரவாத விலையினை விதித்து மிகை நிரம்பலைக் கொள்வனவு செய்கின்றது இதனை வரைபு காட்டுகின்றது.




பின்வரும் சோர்க்கையில் மிகவும் சரியானது

| | உத்தரவாதத்திற்கு முன் உற்பத்தியாளன் மிகை | உத்தரவாதத்திற்கு பின் உற்பத்தியாளன் மிகை | சமூகநலனில் ஏற்படும் பாதிப்பு |
|---|---|---|---|
| 1 | D + E | D + E+B+C+J | J + K |
| 2 | D + E | D + E+B+C+J | J + K+G+H |
| 3 | D + E | D + E+B+C+J | C + E + G + H + K |
| 4 | D + E | D + E+B+C+J | C + E + G |
| 5 | D + E | D + E+B+C+J | G + H + K |

**28.** உயர்ந்தபட்சக் கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டதன் விளைவினைப் பின்வரும் வரைபு காட்டுகின்றது.இக் கட்டுப்பாட்டு விலை காரணமாக நுகர்வோனுக்கு மேலதிகச் செலவு காத்திருத்தல் செலவு என்பன ஏற்படாவிடத்து நுகர்வோன்மிகை மற்றும் உற்பத்தியாளன் மிகை என்பன






Scanned by TapScanner

| | உற்பத்தியாளன் மிகை | நுகர்வோன் மிகை |
|---|---|---|
| 1 | D E H | A |
| 2 | H | A B C D E F G |
| 3 | H | A |
| 4 | DH | A B C |
| 5 | H | A B D |

**29.** பொருளியல் இலாபம், கணக்கியல் இலாபத்திலும் குறைவாக இருப்பதற்குக் காரணமாக அமைவது
(1) பொருளியல் செலவு ஏற்படுவது
(2) வெளிப்படையான செலவு ஏற்படுவது
(3) உட்கிடையான செலவு ஏற்படுவது
(4) ஆழ்ந்த செலவு ஏற்படுவது
(5) அமையச்செலவு ஏற்படுவது

**30.** குறுங்கால உற்பத்திச் செயற்பாட்டின் போது சராசரி பௌதீக உற்பத்தி(APP) உச்சமாகக் காணப்படும் போது
(1) எல்லைப் பௌதீக உற்பத்தி(MPP) அதற்குச் சமமாகக் காணப்படுவதுடன் சராசரிச் செலவு அதிதாழ்ந்த மட்டத்தில் காணப்படும்.
(2) எல்லைப் பௌதீக உற்பத்தி(MPP) அதற்குச் சமமாகக் காணப்படுவதுடன் சராசரி மாறுஞ் செலவு அதிதாழ்ந்த மட்டத்தில் காணப்படும்.
(3) எல்லைப் பௌதீக உற்பத்தி(MPP) உச்சமாகக் காணப்படுவதுடன் சராசரி மாறுஞ் செலவு அதிதாழ்ந்த மட்டத்தில் காணப்படும்.
(4) எல்லைப் பௌதீக உற்பத்தி(MPP) பூச்சியமாகக் காணப்படுவதுடன் சராசரி மாறுஞ் செலவு அதிதாழ்ந்த மட்டத்தில் காணப்படும்.
(5) எல்லைப் பௌதீக உற்பத்தி(MPP) பூச்சியமாகக் காணப்படுவதுடன் சராசரி மாறுஞ் செலவு அதியுயர்ந்த மட்டத்தில் காணப்படும்.

**31.** கீழே தரப்பட்ட கூற்றினைப் பூர்த்தி செய்வதற்கு பின்வரும் தரவுகளில் மிகப் பொருத்தமானது சராசரி பௌதீக உற்பத்தி (APP) உயர்வாகக் காணப்படும் போது……...........................

(1) பௌதீக எல்லை உற்பத்திக்கு அது சமனாகக் காணப்படும்
(2) மொத்த பௌதீக உற்பத்தி உயர்வாகக் காணப்படும்
(3) பௌதீக எல்லை உற்பத்தி உயர்வாகக் காணப்படும்

(1) (1)மட்டும் சரி (2) (1)ம்(2)ம் சரி (4) (1)ம்(3)ம் சரி
(4) (2)ம் (3)ம் சரி (5) யாவும் சரி

**32.** கீழே குறித்த நிறுவனத்தின் செலவு தொடர்பான அட்டவணை வருமாறு

| வெயியீடு | 0 | 1 | 2 | 3 |
|---|---|---|---|---|
| மொத்த செலவு | 1500 | 1700 | 1850 | 1950 |

மேலே நிறுவனம் 3ம் அலகை உற்பத்தி செய்த போது சராசரி மாறும்செலவு (AVC) மற்றும் எல்லைச் செலவு(MC) முறையே
(1) AVC=100 ,MC=150
(2) AVC=150,MC=100
(3) AVC=150 ,MC=450
(4) AVC=650 ,MC=100
(5) AVC=650,MC=450

.**33.** சந்தை அமைப்புக்கள் வேறுபடுவதற்கான காரணங்களில் ஒன்றாக அமைவது எது
(1) நிறுவனங்களின் நன்மதிப்பு மட்டம் (2) நிறுவனங்களின் அமைவிடம்
(3) நிறுவனங்கள் மேற்கொள்ளும் விளம்பரம் (4) பண்டம் அல்லது உற்பத்திப் பொருளின் தன்மை
(5) நிறுவனங்களின் மூலதன அளவு

**34.** குறுங்காலத்தில் நட்டத்தில் இயங்கும் நிறைபோட்டி நிறுவனம் தொடர்பாக பொருத்தமான கூற்று
(1) உடனடியாக தொழிலை முடிவுறுத்தும்
(2) தற்போது இயங்கும் போதும் எதிர்காலத்தில் நிச்சயம் முடிவுறுத்தும்
(3) சராசரி மொத்தச் செலவை ஈடுசெய்ய முடியுமாயின் தொடர்ந்து இயங்கும்
(4) சராசரி மாறுஞ் செலவை ஈடுசெய்ய முடியுமாயின் தொடர்ந்து இயங்கும்.
(5) எல்லைச் செலவை ஈடுசெய்ய முடியுமாயின் தொடர்ந்து இயங்கும்



Scanned by TapScanner

**35.** குறித்த நிறுவனத்தின் ஒரு பொருளுக்கு எல்லா விலைகளிலும் கேள்வி நெகிழ்ச்சி ஒருமை நெகிழ்ச்சியாகும். இப்பண்டத்தின் தற்போதைய விலை P யாகும். கீழே தரப்பட்ட எக் கூற்று அல்லது கூற்றுக்கள் சரியானவை.

கூற்று 1: இவ் நிறுவனத்தின் எல்லை வருமானம் பூஜ்ஜியம்.

கூற்று 2: இவ் நிறுவனத்தின் சராசரி வருமானம் மாறாது.

கூற்று 3: இவ் நிறுவனத்தின் மொத்த வருமானம் தற்போது காணப்படும் விலையில் உச்சப்படுத்தப்படும்.

(1) கூற்று 1 மட்டும் சரி
(2) கூற்றுக்கள் 1உம் 2உம் மட்டும் சரி
(3) கூற்று 3மட்டும் சரி
(4) கூற்றுக்கள் 1உம் 3உம் மட்டும் சரி
(5) கூற்றுக்கள் எல்லாம் சரி

**36.** ஒரு நிறுவனம் பெறுகின்ற வருமானத்தில் பெரும் பகுதி சிக்கன வாடகையாகவும் சிறிய பகுதி மாற்றல் கட்டணமாகவும் காணப்படின் உற்பத்திக்காரணியின் நிரம்பல் நெகிழ்ச்சி

(1) ஒன்றிலும் அதிகம்
(2) ஒன்றிலும் குறைவு
(3) ஒன்றிற்குச் சமம்
(4) முடிவிலி
(5) பூச்சியம்

**37.** அ. நிதி நிறுவனமல்லாத கூட்டுஸ்தாபனங்கள்

ஆ. நிதிக கூட்டுஸ்தாபனங்கள்

இ அரசதுறை

ஈ. வீட்டுத்துறைக்குச் சேவை வழங்கும் இலாப நோக்கமற்ற நிறுவனங்கள்

உ குடும்ப அலகுகள்

புதிய வகைப்படுத்தலுக்கமைவாக பொருளாதாரப் பரப்பொன்றில் செயற்படும் நிறுவன அலகுக்குள் உள்ளடங்கக் கூடியது.

(1) அ. மட்டும்
(2) அ,ஆ. மட்டும்
(3)அ,ஆ,இ மட்டும்
(4) அ,ஆ,இ,ஈ மட்டும்
(5) அ,ஆ,இ,ஈ,உ அனைத்தும்

**38.** மொத்த உள்நாட்டு மூலதனவாக்கத்தின் ஒரு கூறாகிய சொத்துக்களிலிருந்தான மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கத்தில் **உள்ளடக்கப்பட முடியாத விடயம்** எது?

(1) அறிவுசார் ஆதன உற்பத்தி
(2) பயிரிடப்பட்ட உயிரியல் மூலப்பொருட்கள்
(3) கட்டடவாக்கம்
(4) இருப்புக்களில் மாற்றம்
(5) பொறிகள்,கருவிகள் மற்றும் ஆயுத முறைமை

**39.** பொருட்கள் சேவைகளின் மொத்த உற்பத்தியின் பெறுமதியிலிருந்து இடைநிலை மூலப்பொருட்களின் பெறுமதியைக் கழிக்கும் போது கிடைக்கின்ற பெறுமதி

(1) மொத்த இறுதிப் பொருள் பெறுமதியாகும்.
(2) மொத்த நிலையான மூலதன நுகர்வு
(3) மொத்த நுட்டப்பட்டப் பெறுமதி
(4) மொத்த தேசிய வருமானம்
(5) தேறிய தேசிய வருமானம்

**40.** வீட்டுத்துறை உறுப்பினரால் நிறைவேற்றப்படும் சேவைகள் பொருளாதார உற்பத்திச் செயற்பாடுகளாகக் கருதப்படக் கூடியது.

(1) வீட்டு உறுப்பினர்களுக்கு உணவு சமைத்தல்
(2) குழந்தைகள் பராமரித்தல்
(3) வீட்டில் வலது குறைந்தோரையும் முதியவர்களையும் பாதுகாத்தல.
(4) வீட்டை அழகுப்படுத்தலும் சுத்தம் செய்தலும
(5) சம்பளம் பெறும் ஊழியர்கள் மூலம் நிறைவேற்றப்படும் குடும்ப வேலைகள்.

**41.** மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் பண்டங்களும் காரணி அல்லாத சேவைகளின் இறக்குமதியைச் சீராக்கம் செய்யும் போது

(1) மொத்த வளக்கிடைப்பனவு பெறப்படும்
(2) மொத்த உள்நாட்டுச் செலவு பெறப்படும்
(3) மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் பெறப்படும்
(4) இறுதி நுகர்வுச் செலவு பெறப்படும்
(5) மொத்த உள்நாட்டு செலவு பெறப்படும்



Scanned by TapScanner

**42.** தேசிய வருமானத்தில் உள்ளடங்காத வீட்டுத்துறைக்குக் கிடைக்கப் பெறும் வருமானம் எது
(1) தேறிய வெளிநாட்டு தனியார் இரண்டாம் நிலை வருமானம்
(2) மூலதன நுகர்வு
(3) பகிரப்படாத கம்பனி இலாபங்கள்
(4) கம்பனி வரி
(5) சமூக பாதுகாப்புக்கான பங்களிப்பு நிதி

**43.** சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி பின்வருமாறு மதிப்பிடப்படும்
(1) வேளாண்மை,காடாக்கல்,மீன்பிடித்தல் + கைத்தொழில் + பணிகள்
(2) அடிப்படைவிலையில் கூட்டப்பட்ட பெறுமதி + உற்பத்திகள் மீதான மானியம் கழித்த வரிகள் + உலகம் முழுவதிலிருந்தான முதன்மை வருமானங்கள்
(3) அடிப்படைவிலையில் கூட்டப்பட்ட பெறுமதி - உற்பத்திகள் மீதான மானியம் கழித்த வரிகள் - உலகம் முழுவதிலிருந்தான முதன்மை வருமானங்கள்
(4) அடிப்படைவிலையில் கூட்டப்பட்ட பெறுமதி + உற்பத்திகள் மீதான மானியம் கழித்த வரிகள்
(5) அடிப்படைவிலையில் கூட்டப்பட்ட பெறுமதி - உற்பத்திகள் மீதான மானியம் கழித்த வரிகள்

**44** எந்தவிதமானதொரு அரச தலையீடு அற்ற மூடிய பொருளாதாரம் தொடர்பாக மிகவும் சரியானது
(1) சமநிலையில் முதலீடு சேமிப்பிலும் அதிகமாக இருக்கலாம்
(2) சமநிலையில் முதலீடு சேமிப்பிலும் குறைவாக இலுக்கலாம்
(3) சமநிலையில் முதலீடு சேமிப்புக்கு அதிகமாக அல்லது குறைவாக இருக்கலாம்.
(4) சமநிலையில் முதலீடு சேமிப்பிற்கு கட்டாயம் சமமாக இருக்க வேண்டும்
(5) எல்லா வருமானத்திலும் சேமிப்பும் முதலீடும் கட்டாயம் சமமாகக் காணப்படும்.


**45** ஒரு திறந்த பொருளாதாரத்தில் தன்னிச்சையான செலவீடுகள் 2000 மில்லியன் ரூபாவாகவும் தன்னிச்சசையான நுகர்வு 500 எல்லைச் சேமிப்பு நாட்டம் 0.2 எனின்

| | சமநிலைத் தேசிய வருமானம் | நுகர்வுச் சமன்பாடு |
|---|---|---|
| (1) | 2500 | C = 500 + 0.2Yd |
| (2) | 2500 | C = 500 + 0.8Yd |
| (3) | 10000 | C = 500 + 0.2Yd |
| (4) | 10000 | C = 500 + 0.8Yd |
| (5) | 12500 | C = 500 + 0.8Yd |

**46.**வரிப் பெருக்கி **-4** ஒரு மூடிய பொருளாதாரத்தில் வரியும் அரச செலவீடும் ஒரே சமயத்தில் அதிகரிக்கின்றன ஆனால் சமநிலைத் தேசிய வருமானம் மாறவில்லை எனின்
(1) வரி 50 மில்லியால் அதிகரிக்கும் அதேவேளை அரசகொள்வனவும் 50 மில்லியனால் அதிகரிக்கின்றது
(2) வரி 50 மில்லியால் அதிகரிக்கும் அதேவேளை அரசகொள்வனவும் 50 மில்லியனால் குறைவடைகின்றது.
(3) வரி 50 மில்லியால் அதிகரிக்கும் அதேவேளை அரசகொள்வனவும் 40 மில்லியனால் அதிகரிக்கின்றது
(4) வரி 50 மில்லியால் அதிகரிக்கும் அதேவேளை அரசகொள்வனவும் 40 மில்லியனால் குறைவடைகிறது
(5) வரி 50 மில்லியால் அதிகரிக்கும் அதேவேளை அரசகொள்வனவு மாற்றமின்றிக் காணப்படுகின்றது.

**47.** கூட்டுமொத்தக்கேள்வியில் (aggregate demand)அதிகரிப்பை எவ்வாறு அடையலாம்?
(1) நேரில் வரி விகிதங்களை (indirect tax rates)அதிகரிப்பதன் மூலம்.
(2) உட்கட்டமைப்புக்களில் பொதுச் செலவினத்தை அதிகரிப்பதன் மூலம்.
(3) வட்டி விகிதங்களை அதிகரிப்பதன் மூலம்.
(4) இலங்கை ரூபாவின் வெளிவாரிப் பெறுமதியை (external value)அதிகரிப்பதன் மூலம்.
(5) பொருளாதார மந்தநிலைமை ஒன்றை உருவாக்குவதன் ஊடாக

**48.** ஒரு ஒளிய பொருளாதாரத்தின் வரைபு தரப்பட்டுள்ளது.இங்கு நுகர்வுக்கோட்டில் $C\text{-}C_1$ இனை நோக்கி ஒரு அசைவு இடம்பெறும் போது




| | தன்னிச்சையான செலவீடு | பெருக்கி |
|---|---|---|
| (1) | அதிகரிக்கும் | குறைவடையும் |
| (2) | குறைவடையும் | அதிகரிக்கும் |
| (3) | அதிகரிக்கும் | மாறாது |
| (4) | மாறாது | மாறாது |
| (5) | மாறாது | அதிகரிக்கும். |



Scanned by TapScanner

**49.** ஒரு எளிய பொருளாதாரத்தில் தன்னிச்சையான நுகர்வு 800 தன்னிச்சையான செலவீடு 1000 சமநிலைத் தேசிய வருமானம் 4000 எனின் இப் பொருளாதாரத்தின் முதலீடு மற்றும் எல்லை நுகர்வு நாட்டம்(MPC) என்பன

| | முதலீடு | எல்லை நுகர்வு நாட்டம் |
|---|---|---|
| (1) | 100 | 0.8 |
| (2) | 100 | 0.75 |
| (3) | 200 | 0.8 |
| (4) | 200 | 0.75 |
| (5) | 400 | 0.6 |

**50.** திறந்த பொருளாதாரத்தின் தரவுகள் வருமாறு சமநிலைத் தேசிய வருானத்திற்கான தொகுதியை தெரிவு செய்க.

| | Y | C | S | T | M | I | G | X |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | 10 | 8 | 0 | 2 | 2 | 8 | 4 | 4 |
| (2) | 20 | 16 | 2 | 2 | 4 | 8 | 4 | 4 |
| (3) | 30 | 24 | 4 | 2 | 6 | 8 | 4 | 4 |
| (4) | 40 | 32 | 6 | 2 | 8 | 8 | 4 | 4 |
| (5) | 50 | 40 | 8 | 2 | 10 | 8 | 4 | 4 |



Scanned by TapScanner